18th August 1961]

முடியாத அளவுக்கு அங்கே நிதிக் கஷ்டம் இருக்கிறது. அதனல் அரசாங்கம் ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : This does not arise out of the main question.

Kalambur High School

* 1242 *Q.*—**SRI S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு வடாற்காடு மாவட்டம் களம்பூர் உயர் நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷையில் தேர்ச்சி பெருத பிள்ளைகள் இவ்வாண்டு பள்ளியில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்களா ?

(இ) இல்லையானல் காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The admission of supplementary pupils would have necessitated the opening of a third section which was not possible due to lack of accommodation in the school.

SRI S. M. ANNAMALAI : ஸார், அதே பள்ளியில் பல வகுப்பு களுக்கு இரண்டாவது செக்ஷன், மூன்ருவது செக்ஷன் ஓபன் செய்திருக்கும்போது, இந்த ஒன்றுக்கு மட்டும் ஏன் போதிய இடம் இல்லை என்ற காரணம் காட்டி பிள்ளைகள் சேர்க்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நாம் முதலில் முடிவு செய்யவேண்டியது, ஃபெயில் ஆகும் பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமா அல்லது தேர்வு பெற்று வரும் பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமோ என்பது. 'ஃபெயில் ஆகும் பிள்ளைகளுக்குத் தான் பள்ளிக்கூடம் இருக்கவேண்டும். பாக்கிப் பேர்கள் வீட்டில் இருக்க வேண்டும்' என்று சொன்னல் அங்கத் தினருடைய யோசனையை ஏற்றுக்கொள்ள முடியும்.

SRI S. M. ANNAMALAI : ஃபெயில் ஆகும் பிள்ளைகளைச் சேர்க்காமல் இருக்கலாம். ஆனல் பெண்களையாவது சேர்த்துக் கொள்ளக் கூடாதா ? அவர்கள் 10 மைல் நடந்து சென்று படித்து விட்டு வரவேண்டியிருக்கிறதே. அதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எத்தனை பெண்கள் சேர்க்கப்படவில்லை என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. உண்மை யில் சேர்க்கப்படவில்லையா என்று கனம் அங்கத்தினருக்குக் கூடத் தெரியுமோ என்னவோ தெரியாது. பெண்களைப் பொறுத்த வரையில் அநேகமாக அவர்கள் ஃபெயில் ஆவதில்லை.